மரஞ்செடி கொடிகள் அலகு – 3

தரம் - 05

ஆசிரியர் :- என்.எஸ்.தீபன்
B.A, PG Dip.in Edu, Dip.in Teach

MATHS HALL – வவுனியா
புலமைக் கல்லூரி – சாவகச்சேரி


பெயர் - .....

01. தண்டுப்பகுதி மிக மென்மையானதாகவும், படர்ந்து செல்லும் தன்மை உடையதுமான தாவரவகை.
1. செடி 2. புல் 3. கொடி 4. பூண்டு

02. வேர்களினால் தாவரத்திற்குக் கிடைக்கும் பயன் அல்லாதது.
1. மண் படையை இறுகப் பற்றி தாவரத்தின் நிலைப்புக்கு உதவுதல்.
2. தாவரத்திற்குத் தேவையான உணவைத் தயாரித்தல்.
3. நீரையும், கனியுப்புக்களையும் உறிஞ்சி தாவரத்தின் ஏனைய பகுதிகளுக்குக் கடத்துதல்.
4. சில தாவரங்களின் புதிய கன்று உருவாக்கத்திற்கு உதவுதல்.

03. தாவரம் ஒன்றில் அதிகளவு பூக்களைத் தரும் தாவரத்தின் பகுதி.
1. அதிக சூரியஒளிபடும் கிளைப்பகுதி
2. நன்கு உயரத்தில் உள்ள கிளைப்பகுதி.
3. நிழல்மரங்களால் சூழப்பட்ட கிளைப்பகுதி.
4. அதிக இலைகளைக் கொண்ட கிளைப்பகுதி.

04. இலைகளினால் தாவரத்திற்கு கிடைக்கும் பிரதான பயன்பாடாக அமைவது.
1. சுற்றுப்புறச் சூழலுக்கு நிழலை வழங்குதல்.
2. ஒரு சில தாவரங்களின் இனப்பெருக்கத்திற்கு உதவுதல்.
3. ஒளித்தொகுப்பின் மூலம் தாவரத்திற்குத் தேவையான உணவைத் தயாரித்தல்.
4. தாவர இலைக்கழிவுகள் தாவரத்திற்குப் பசளையாதல்.



05. இத்தாவரம் (A) கொண்டுள்ள பிரதான வேர்வகை.
1. ஆணிவேர் 2. நாருருவேர் 3. பக்கவேர் 4. தாங்கும்வேர்

06. B வேர் வகையின் பெயர் யாது?
1. நாருருவேர் 2. மிண்டிவேர் 3. ஆணிவேர் 4. பக்கவேர்

07. அதிகளவு பூக்களைக் கொண்ட தாவரம் ஒன்றில் பூக்கள் அனைத்தும் காய்களை உருவாக்காமைக்குரிய பிரதான காரணம்.
1. பூக்கள் அதிகளவில் வாடி விழுந்தமை
2. அதிகளவான பூக்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறாமை.
3. பூக்களில் அதிகளவான தேனீக்கள், தேன்சிட்டுக்கள் தேன் அருந்த வந்தமை.
4. அதிகளவான பூக்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெற்றமை.

www.lkedu.lk

08.  இத்தாவர வகை கொண்டுள்ள வேர்வகை.
1. நாருருவேர் 2. பக்கவேர் 3. சேமிப்புவேர் 4. ஆணிவேர்

09. பின்வரும் தாவர வகைகளில் ஆணிவேர்த் தாவரம்.
1. தென்னை 2. கத்தரி 3. பனை 4. நெல்

10. வேர்களில் மட்டும் உணவு சேமிக்கும் தாவரம் அல்லாதது.
1. இராசவள்ளி 2. கரட் 3. வற்றாளை 4. மரவள்ளி

11. பின்வரும் தாவரவகைகளில் ஒரு வித்திலைத் தாவரம்.
1. அன்னமுன்னா 2. மா 3. கமுகு 4. பாலை

12. வேரின் மூலம் புதிய கன்றை உருவாக்கும் தாவரவகை அல்லாதது.
1. கறிவேப்பிலை 2. தோடை 3. வெட்சி 4. ஈரப்பலா

13. பின்வருவனவற்றுள் மேலொட்டித் தாவரமாக அமைவது.
1. பாசி – குரவிச்சை 2. வெற்றிலை – மிளகு
3. பனங்கற்றாளை – ஐதரில்லா 4. குருவிச்சை – பனங்கற்றாளை

14. தண்டின் மூலம் புதிய கன்றை உருவாக்கும் தாவரவகை அல்லாதது.
1. கங்குன் 2. மரவள்ளி 3. வெண்டி 4. வற்றாளை

15. வரண்ட நிலப்பிரதேசங்களில் வளர்வதற்குரிய இயைபாக்கத்தை கொண்டுள்ள தாவரவகை.
1. நாகதாளி 2. தென்னை 3. பூசணி 4. வாழை

16. இலையின் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவர வகை?
1. அன்னாசி 2. சதைகரைச்சான் 3. வல்லாரை 4. தாமரை

17. காற்றினால் பரம்பலடையும் வித்து அல்லாதது.
1. முருங்கை 2. ஆடையொட்டி 3. எருக்கலை 4. பருத்தி

18. நெற்றுக்களை உருவாக்கும் தாவர வகை?
1. பயற்றங்காய் 2. சோளம் 3. நாவல் 4. மரமுந்திரி

19. பண்டைய காலத்தில் தங்கத்தின் நிறையை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வித்து.
1. பருத்தி 2. மஞ்சாடி 3. வெடிபலவன் 4. குன்றிமணி

20. விலங்குகளினால் பரம்பலடையும் வித்துக்கள் கொண்டிராத பண்பாக அமைவது.
1. சுவையான சதைப்பகுதியைக் கொண்ட பழம் இருத்தல்.
2. வித்தின் வெளிப்பகுதி முட்களைக் கொண்டிருத்தல்.
3. பழத்தின் சதைப்பகுதி ஒட்டும் தன்மையைக் கொண்டிருத்தல்.
4. வித்துக்கள் நார்த்தன்மை கொண்டதாக இருத்தல்.

21. சிவப்பு, கறுப்பு நிறங்களில் அமைந்த வித்து.

www.ikedu.lk

1. மஞ்சாடி 2. முருங்கை 3. இலவு 4. குன்றிமணி

22. பருமனில் (அளவில்) சிறிய அளவுடைய வித்து.
1. மிளகு 2. வெந்தயம் 3. கடுகு 4. குரக்கன்

23. சக்கரைச் சாதம் செய்யும் போது பயன்படுத்தப்படும் வித்து.
1. பாசிப்பயறு 2. அவரை 3. துவரம்பருப்பு 4. கராமணிப்பயறு

24. நீரில் அமிழ்ந்து வாழும் தாவரவகை அல்லாதது.
1. ஐதரில்லா 2. வலிசுனேரியா 3. தாமரை 4. பாசி

25. மரம் நடுவதன் மூலம் உருவாகும் சாதகமான நிலைமை அல்லாத தெரிவு.
1. சூழல் அழகுணர்ச்சி பெறுவதால் உளச்சுகம் கிடைத்தல்.
2. மண்ணரிப்பு குறைவடைதல்
3. நிலக்கீழ் நீரின் அளவு குறைவடைதல்.
4. மண்வளம் பெறுவதற்கு இயற்கையான பசளை கிடைத்தல்.

26. வறண்ட பகுதிகளில் வளரும் தாவரவகை அல்லாதது.
1. கற்றாளை 2. மிளகு 3. கள்ளி 4. நாகதாளி

27. 'யுனெஸ்கோ தாபனம்' இலங்கையின் தேசிய வனமாக பிரகடனப்படுத்தியது.
1. வில்பத்து 2. சிங்கராஜவனம் 3. படகமுவ வனம் 4. யால

28. தேசப்படங்களில் காடுகளைக் குறித்துக் காட்டப் பயன்படும் நியம நிறம்.
1. ஊதா 2. நீலம் 3. பச்சை 4. கபிலம்

29. 'படகமுவ வனம்' அமைந்துள்ள மாவட்டம்.
1. புத்தளம் 2. இரத்தினபுரி 3. பதுளை 4. குருநாகல்

30. காடுகள் குறைவடைந்து வருவதால் பிராணிகளுக்கு ஏற்படும் பாதகமான நிலைமை அல்லாதது?
1. விறகுக்குத் தட்டுப்பாடு ஏற்படல். 2. பருகுவதற்கு நீர்த்தட்டுப்பாடு ஏற்படுதல்.
3. வாழிடங்கள் இல்லாது போதல் 4. உணவுப்பற்றாக்குறை ஏற்படுதல்.

31. 'சிங்கராஜ வனம்' அமைந்துள்ள மாவட்டம், மாகாணத்தைச் சரியாகக் காட்டும் தெரிவு.
1. கேகாலை – சப்ரகமுவ 2. பதுளை – ஊவா
3. இரத்தினபுரி – ஊவா 4. இரத்தினபுரி – சப்ரகமுவ

32. 'ஒரு நாட்டுக்குரிய தாவரங்கள்' எனப்படுவது.
1. அந்நாட்டில் அதிகளவில் காணப்படும் தாவரங்கள்.
2. வேறு நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட தாவரங்கள்.
3. அந்நாட்டில் தோன்றிய அந்நாட்டுக்கு உரித்தான மரஞ்செடி கொடிகள்.
4. அத் தாவரங்களின் பொருளாதார நன்மைகள் அந்நாட்டுக்கு மட்டுமே உரியதாகும்.

33. தண்டு, இலைகளில் முட்களைக் கொண்ட மூலிகைத் தாவரம்.
1. குறிஞ்சா 2. கீழ்க்காய் நெல்லி 3. தூதுவளை 4. முடக்கொத்தான்

www.lkedu.lk

34. பின்வரும் வித்துக்களில் விரைவான முளைதிறன் கொண்டது.
1. மிளகாய் 2. தேங்காய் 3. பயறு 4. பாகல்

35. இலை தடிப்பாக உள்ள மூலிகைத் தாவரம்.
1. பசளி 2. குறிஞ்சா 3. துளசி 4. வேம்பு

36. சமயச் சார்புடைய இலை வகைத் தாவரம் அல்லாதது.
1. வேம்பு 2. அரசு 3. கள்ளி 4. துளசி

37. தண்டில் காய்களைத் தோற்றுவிக்காத தாவரம்.
1. பலா 2. அன்னமுன்னா 3. விளிம்பி 4. நெல்லி

38. நண்பகலில் மலரும் பூ வகை.
1. பாதிரிமலர் 2. செவ்வந்தி 3. முல்லை 4. செவ்வரத்தை

39. வித்தின் மூலமும், தண்டுத் துண்டம் மூலமும் புதிய கன்றை உருவாக்குவது.
1. மரவள்ளி 2. குறோட்டன் 3. பசளி 4. றோசா

40. இரவில் மலரும் பூவகை அல்லாதது.
1. கடுபுல் - குண்டுமல்லிகை 2. தாழம் பூ - கடுபுல்
3. நித்தியகல்யாணி – ஊசிமல்லிகை 4. கொடிமல்லிகை – நடுநிசிப்பூ

41. இலங்கையின் தேசிய மரம்.
1. வேம்பு 2. நாகமரம் 3. நீலஅல்லி 4. அரசு

42. தமிழ், சிங்களப் புத்தாண்டையொட்டிப் பூக்கும் தாவரவகை அல்லாதது.
1. முள்முருக்கு 2. வேம்பு 3. நாவல் 4. முருங்கை

➢ கற்றலுக்கு உரியது

❖ இலங்கைக்கே உரித்தான தாவரங்கள்.

எண்ணை, ஹீன்போ விட்டியா, கெக்கட்டியா, கொடபறை, பச்சைக் கொரக்காய்ப்புளி, குங்குலிய மரம், வெசாக் ஒக்கிட்டு, பெரும் பிரம்பு, காட்டிலுப்பை, தொம்மாக் கொட்டை, சீண்டுக் கொடி, தொரணை, கஸ்தூரி மஞ்சள், பாக்கிலிப்பால், நிலவேம்பு

❖ இலங்கையில் இலங்கைக்கே உரித்தான **830 தாவர வகைகள்** உள்ளன.

www.lkedu.lk

www.lkedu.lk